# முன்னுரை

# ஆய்வின் அமைப்பும் நோக்கமும்

மக்களின் நாகரிகத்தை - பண்பாட்டை - உயர்ந்த கருத்துகளை வெளிப்படுத்துவன இலக்கியங்கள். நொய்யும் நொறுங்கும் களைந்து அரிசி ஆக்கினாற் போல், மேடும் பள்ளமும் களைந்து கழனியாக்கினாற் போல் களைவனக் களைந்து, கொள்வன கொண்டொழுகும் செம்மையான வாழ்க்கையை இலக்கியங்கள் நமக்குக் கற்றுத் தருகின்றன. மரபுகளைப் பதிவு செய்திருப்பதில் இலக்கியங்களின் பங்களிப்பு எண்ணத்தக்கது.

மனித வாழ்க்கையின் பிரதிபலிப்பே இலக்கியம். தமிழ் இலக்கியம் இருபது நூற்றாண்டுகள் பாரம்பரியம் உடையது. இவ்விலக்கியங்கள் தாங்கள் எழுந்த காலத்தில் நிலவிய, மக்களின் வாழ்க்கை முறைகள், அவர்தம் பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள் ஆகியனவற்றைத் தம் பின்புலன்களாகக் கொண்டு எதிர்வரும் தலைமுறையினர் அறிந்து கொள்வதற்கு உதவும் வரலாற்றுக் கருவூலங்களாக அமைகின்றன.

ஐஞ்சிறு காப்பியக்கால மகளிரின் வாழ்க்கை நிலையை இதுகாறும் அணுகுமுறையில் விரிவாக ஆராய்ச்சி செய்யப்படவில்லை; காப்பியங்கள் வழியே சமுதாயத்தையும், தொன்மைத் தமிழ்ப் பெண்களின் வாழ்க்கை முறையையும் அறிந்து கொள்ளும் விருப்பத்தினால் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மண்ணில் மனித இனம் தோன்றிய நாள் தொட்டே குடும்பம் வாழையடி வாழையாக வளர்ந்து கொண்டிருக்கிறது. அத்தகைய குடும்பத்திற்கு அடித்தளமாக விளங்கும் மகளிர் நிலைப்பற்றியும், அவர்களுடைய வாழ்க்கை முறையைப் பற்றியும் ஐஞ்சிறு காப்பியங்கள் வழி அறிந்து கொள்ளலாம்.

**ஆய்வுத் தலைப்பு :-**

**“ஐஞ்சிறு காப்பியங்களில் மகளிர் நிலை”** என்பது இவ்வாய்வேட்டின் ஆய்வுத் தலைப்பாகும். இவ்வாய்வேடு ஐஞ்சிறு காப்பியங்கள் எனக்குறிப்பிடப் பெற்ற நூல்களின் செய்திகளை ஆராய்ந்து அவற்றுட் காணப்பெறும் மகளிர் நிலையைப் புலப்படுத்துகின்றது. ஐஞ்சிறு காப்பியங்களில் மகளிர் நிலை மட்டும் குறித்து முழுமையான ஆய்வு இதுகாறும் செய்யப்படவில்லையாதலால் இத்தலைப்பு ஆய்வுத் தலைப்பாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

**ஆய்வு நோக்கம் :-**

ஐஞ்சிறு காப்பியங்களை ஆராய்கின்ற பொழுது இன்றைய காலநிலையில் பிற ஆய்வுகளைவிட சமுதாய ஆய்வு மிகுந்த அளவில் தேவைக்குரியதாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இது குறித்து ஆய்வாளர்களால் முழுமையான ஆய்வு நிகழ்த்தப் பெறவில்லையாதலால் ஐஞ்சிறு காப்பியக்கால மகளிரின் நிலையை சமுதாய அடிப்படையில் ஆராய்ந்து, அன்றையச் சமுதாயத்தில் மகளிர் மேற்கொண்ட வாழ்க்கைப் பாங்கினை வெளிப்படுத்துவது இவ்வாய்வின் முதன்மையான நோக்கமாகும். அம்மகளிர் கடைப்பிடித்து வந்த நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் மேற்கொண்ட சடங்குகள் ஆகியவற்றை ஆராய்ந்து அவர்களின் வாழ்க்கை முறையினை வெளிப்படுத்துவதே ஆய்வாளரின் நோக்கமாகும்.

**முதன்மை ஆதாரங்கள் :-**

ஐஞ்சிறு காப்பியங்களான உதயணகுமார காவியம், நாககுமார காவியம், யசோதர காவியம், சூளாமணி, நீலகேசி ஆகிய நூல்கள் முதன்மை ஆதாரங்களாகக் கொள்ளப்பட்டன.

**துணைமை ஆதாரங்கள் :-**

சங்க இலக்கியம் பற்றிய ஆய்வேடுகள், காப்பியம் தொடர்பாக வெளிவந்துள்ள தமிழ், ஆங்கிலக் கட்டுரைகள், தமிழ் ஆங்கிலக் களஞ்சியங்கள் அகராதிகள், ஆய்வுக் கோவைகள், இதழ்கள் போன்றவை இவ்வாய்விற்குத் துணைமை ஆதாரங்களாக அமைகின்றன. மேலும் எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, தொல்காப்பியம், நன்னூல், புறப்பொருள், வெண்பாமாலை, நம்பியகப்பொருள் போன்ற இலக்கண நூல்களும், துணைமை ஆதாரங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**ஆய்வு எல்லை :-**

ஐஞ்சிறு காப்பியங்களில் படைக்கப்பட்டுள்ள பெண்கள் தொடர்பான செய்திகள் மட்டும் ஆய்வு எல்லையாக வரையறுக்கப்பட்டுள்ளன.

**கருதுகோள் :-**

காப்பியக் காலத்தில் பெண்கள் குடும்பத்திலும், சமூக அமைப்பிலும் இரண்டாம் நிலையிலேயே வாழ்ந்தனர். ஆயினும் பழங்காலக் கற்புக் கோட்பாடு, மனையற மாண்புகள், கலை, விளையாட்டு, ஒப்பனைகள் ஆகியவற்றைப் பற்றிய செய்திகளைத் தொகுப்பதோடு, அம்மகளிர் வாழ்ந்த சமூகச் சூழல், பண்பாட்டுச் சூழல், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், இறைவழிபாட்டுச் சிந்தனைகள் ஆகியவற்றிற்குரிய காரணங்களையும் சுட்டிக் காட்ட முயன்றிருக்கிறது. இவ்வாய்வேடு, காலமாற்றத்திற்கு ஏற்பவும், அறிவியல் முன்னேற்றம் காரணமாகவும், மகளிர் வாழ்க்கையில் மாற்றங்கள் நிகழுதல் தவிர்க்க முடியாதது அனைவரும் அறிந்த ஒன்று.

ஒரு காலநிலையில் குறிப்பிட்ட ஒரு சமூக அமைப்பில் மகளிர் எவ்வாறு வாழ்ந்தனர் என்ற ஆராய்ச்சிப் பார்வையில், அச்சமூகம் அவர்கட்கு வழங்கியிருந்த தகுதிநிலையையும், குடும்ப உறவையும் கண்டறிய இயலும்.

அவற்றுள் ஏற்கத்தக்கனவற்றை ஏற்றும், நீக்கத்தக்கனவற்றையும் நீக்கியும் வாழ்தல் இன்றைய மகளிர்சமுதாயத்திற்கு ஏற்புடையது.

**ஆய்வின் அணுகுமுறைகள் :-**

1. காப்பியங்களில் காணப்படும் மகளிரைப் பற்றிய கருத்துக்களை ஆராய்வதால் உள்ளடக்க ஆய்வு (Study on Contents)
2. பாத்திரங்கள் மெய்ப்பாடு ஆளுமை, ஆகியவற்றை ஆராய உளவியல் முறைகள் ஆய்வு (Psychological Study)
3. காப்பியங்களில் எவை எவை நற்பண்புகளைக் காட்டும் என்பதை அறிவதற்குப் பகுப்பாய்வு (Classification of Study)
4. படைப்பாளியின் காலத்தை ஒட்டிய சமூகப் பின்னணியை அறியும் முறையில் சமூகவியல் ஆய்வு (Sociological Study) ஆகிய அணுகுமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**ஆய்வேட்டின் பாகுபாடு :-**

ஆய்வின் அமைப்பும் நோக்கமும்

1. காப்பியங்கள் காட்டும் குடும்பம்
2. மகளிரின் பாத்திரப்படைப்பு
3. பெண்களின் ஒப்பனைத்திறன்
4. காப்பியம் காட்டும் சமுதாயம்
5. முடிவுரை

ஆய்வின் அமைப்பும் நோக்கமும் என்ற தலைப்பில் ஆய்வு நோக்கம், ஆய்வு ஆதாரங்கள், ஆய்வு எல்லை, கருதுகோள், ஆய்வின் அணுகுமுறைகள், ஆய்வேட்டின் பாகுபாடு, இயல்களின் கருத்துச் சுருக்கம் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

**இயல் - 1**

காப்பியங்கள் காட்டும் குடும்பம் என்னும் முதல் இயலில் காப்பியக் காலத்தில் பெண்டிர் காதல் கொண்ட விதமும், வேள்வி முறைப்படித் திருமணம் செய்து கொண்டு ஈருடல் ஓர் உயிராகக் கணவனும், மனைவியும் இன்புற்று வாழ்ந்தும், அடக்கம், பொறுமை, தியாகம், இரக்கம், ஒப்பரவு கொண்டு இல்லறம் நடத்திய பாங்கும், மக்கட்பேற்றில் ஆண், பெண் என்ற பாகுபாடு பாராமல், தாய்ப்பாசத்தோடு குழந்தையை வளர்த்த விதமும், நம்பிக்கையில் மகளிர் கொண்ட ஈடுபாடும், நன்னிமித்தம் பார்த்து, நற்செயல்களைச் செய்து, அதனால் நன்மை அடைந்த விதமும் இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளன.

**இயல் - 2**

மகளிரின் பாத்திரப்படைப்பு என்னும் இரண்டாம் இயலில் பெண்களுக்குரிய குணங்களாகிய அச்சம், மடம், நாணம், பொறை, அன்பு, மென்மைத்தன்மை, போன்றவற்றைக் கொண்டிருந்தமையும், கணவர் மற்றப் பெண்களை மணந்தாலும், தானே மனமுவந்து அதற்குச் சம்மதித்தையும், வாழ்க்கையில் பல இடர்கள் ஏற்பட்ட போதிலும் அதைத் தாங்கிக் கொண்ட பக்குவமும், மன உறுதியும் ஆராயப்பட்டுள்ளன.

**இயல் - 3**

'பெண்களின் ஒப்பனைத் திறன்' என்ற மூன்றாவது இயலில், மகளிர் தழை, பருத்தி, பட்டு ஆகியவற்றால் நெய்த ஆடைகளை அணிந்த செய்திகளும், ஆடையின் பல்வேறு வகைகளும், தளிர், மலர், தழை போன்றவற்றால் செய்த செயற்கை அணிகளும், பொன், வெள்ளி, சங்கு, முத்து, பவளம் போன்றவற்றால் செய்த தலையணி, நுதலணி, காதணி, கழுத்தணி, தோளணி போன்ற பல அணிகலன்களைப் பற்றிய குறிப்புகளும், மகளிர் இயற்கைப் பொருட்களைக் கொண்டு கூந்தல், முகம், கண், நுதல்,

நகம், உடல் ஆகியவற்றை ஒப்பனை செய்து கொண்ட திறமும் ஆராயப்பட்டுள்ளன.

**இயல் - 4**

'காப்பியம் காட்டும் சமுதாயம்' என்ற நான்காம் இயலில், கூத்தாடும் மகளிர் கூத்திலும், ஆடல் மகளிர் நடனத்திலும், பாடல் மகளிர் பண்ணிலும் தங்கள் திறமையை வெளிப்படுத்தியமையும், அரசியலில் பெண்களுக்கு மதிப்புக் கொடுத்து, பட்டம் சூட்டிச் சிறப்பித்தமையும், அன்பால் அறக்கருத்துக்களை எடுத்துரைத்து நல்வழிக்கு வழிவகுத்தமையும், விழாவின் போது மக்கள் ஒன்று திரண்டு இன்புற்றாலும் கணவர் இருக்குமிடமே பெண்களுக்கு சொர்க்கம் என்பதற்கேற்ப, கணவருடன் துறவறம் ஏற்கும் மனைவியரின் பாங்கும், விளையாட்டில் மகளிர் ஈடுபாடு கொண்ட திறமும், 'இறைவனால் முடியாதது ஒன்றுமில்லை' என்ற கூற்றுப்படி மகளிர் நடத்திய வழிபாடும் கூறப்பட்டுள்ளன. இயலின் முடிவில் ஆய்வின் தொகுப்புரைகள் கூறப்பட்டுள்ளன.

**முடிவுரை :**

ஆய்வேட்டின் முடிவுரையில், ஆய்வேட்டின் அனைத்து இயல்களிலும் கண்டறிந்த ஆய்வு முடிவுகள் தொகுத்துச் செறிவாகத் தரப்படுதலோடு, பிற ஆய்வாளர்களுக்கு இடம் கொடுக்கும் ஆய்வுக் களங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

**பின்னிணைப்பு :-**

பின்னிணைப்பில் ஆய்விற்குப் பயன்படுத்தப்பட்ட நூல்கள் அகரவரிசையில் துணைநூற்பட்டியலாக இடம் பெற்றுள்ளது. ஆங்கில நூற்பட்டியலும், இலக்கண இலக்கிய நூல்களும் இடம் பெற்றுள்ளன.